# மார்ச் 13 நடப்பு நிகழ்வுகள்

*(TNPSC, SSC, BANK, UPSC, RAILWAY)*

Visit Us - https:// tamil.examsdaily.in

Face book - ExamsDaily Tamil

## தமிழகம்

### தமிழகத்தில் 17 மாவட்டங்கள் சுத்தமானவை என அறிவிப்பு

- தமிழகத்தில் 17 மாவட்டங்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத சுத்தமான மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் கூறினார்.
- தனது சிறப்புரையில், ''தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 44.56 லட்சம் தனிநபர் கழிப்பறைகள், 2.92 லட்சம் சமுதாய கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன், குப்பைகளில் இருந்து 1.69 லட்சம் டன் உரம் தயாரிக்கப்பட்டுள்ளது'' என்றார்.

### "கடின உழைப்பு நிச்சயம் நம்மை அரியணை ஏற்றும்"

- சென்னை வாழ் குமரி மாவட்ட நல சங்கங்களின் சார்பில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவராக பொறுப்பேற்று உள்ள கே.சிவனுக்கு பாராட்டு விழா, சென்னை அம்பத்தூரில் நடந்தது.
- 'கடின உழைப்பு நிச்சயம் நம்மை அரியணை ஏற்றும்' என்று இஸ்ரோ தலைவர் கே.சிவன் கூறினார்.

## இந்தியா

### பிரதமருக்கும், குடியரசு தலைவருக்கும் தனி விமானம்

- நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் தனித்தனியாக விமானங்கள் வரும் 2020ம் ஆண்டுக்குள் வாங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

### சபரிமலையில் விமானநிலையம் - கேரள அரசு அறிவிப்பு

- கேரள மாநிலம், சபரிமலையில் விமானநிலையம் அமைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்த ஆய்வு அறிக்கை வரும் 31-ம் தேதிக்குள் தயாராகிவிடும் என்று முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்தார்.

### மார்ச் 31 காலக்கெடு நீட்டிப்பு

- ஆதார் வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் வரை வங்கிக் கணக்கு, செல்போன் எண், உள்ளிட்ட பல்வேறு சேவைகளுடன் ஆதார் எண்ணை இணைப்பதை கட்டாயமாக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## உலகம்

### சிரியாவில் போர் நிறுத்தத் தோல்விக்கு அமெரிக்காவே காரணம்

- சிரியாவில் போர் நிறுத்தம் தோல்வி அடைந்ததற்கு அமெரிக்காவே காரணம் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

### வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டுமே கிம் - ட்ரம்ப் சந்திப்பு

- வடகொரியா அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டுமே கிம் - ட்ரம்ப் சந்திப்பு நடைபெறும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

## வணிகம்

### வோடஃபோன் 4ஜி சேவை விரிவாக்கம்

- வோடஃபோன் நிறுவனத்தின் 4ஜி சேவை தமிழகத்தில் 1800-க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக வோடஃபோன் தமிழ்நாடு வணிகப் பிரிவின் தலைவர் எஸ்.முரளி தெரிவித்துள்ளார்.
- ஏர்செல் வாடிக்கையாளர்கள் தங்கள் நிறுவனத்துக்கு மாறிக்கொள்வதற்கு உதவும் வகையில் வாரத்தின் 7 நாட்களும் தங்களது அலுவலகங்கள் செயல்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டு

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதலில் 9 பதக்கங்களுடன் இந்தியா முதலிடம்

- இந்த ஆண்டுக்கான முதல் ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் தொடர் கடந்த 1-ம் தேதி மெக்சிகோவின் குவாடலஜரா நகரில் தொடங்கியது.
- 50 நாடுகளைச் சேர்ந்த 404 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்ட இந்தத் தொடரில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்தது.

## ஐபிஎல் 2018: 'Best vs Best' இந்த சீசனுக்கான பாடல் வெளியீடு

- முதல் முறையாக பிசிசிஐ மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் இணைந்து வெளியிட்ட இந்தப் பாடல் பங்கேற்றுள்ள எட்டு அணிகளின் ஸ்டார் வீரர்களின் முக்கிய தருணங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பாடலை தென் ஆப்பிரிக்காவின் திரைப்பட இயக்குநர் டான் மேக் இயக்கி இருக்கிறார்.
- இந்தப் பாடல் ஐந்து மொழிகளில் ( ஹிந்தி, தமிழ், பெங்காலி, கன்னடா, தெலுங்கு) பாடப்பட்டுள்ளது . 'Best vs Best' என்பதை மையமாகக் கொண்டு இப்பாடல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

---***---